பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

15 10 2025 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா-மங்கோலியா இடையிலான ஒத்துழைப்புகளை அதிகரிக்க உறுதிபூண்டுள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. பிரதமரும் பி.ஜே.பி. மூத்த தலைவருமான திரு.நரேந்திர மோடி, பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரத்தை இன்று தொடங்குகிறார்.

3. நீதிமன்றங்களில் விசாரணைக்கு வரவுள்ள அரசுத்துறை வழக்குகள் பற்றிய தகவல் பலகையை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

4. யுக்ரைன் நாட்டின் முக்கியப் பகுதியை கைப்பற்றியிருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

5. சுல்தான் ஜோஹர் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா-பாகிஸ்தான் இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா-மங்கோலியா இடையிலான ஒத்துழைப்புகளை அதிகரிக்க உறுதிபூண்டுள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நேற்று தம்மை சந்தித்த மங்கோலிய அதிபர் திரு. Khurelsukh Ukhnaa-வுக்கு குடியரசுத்தலைவர் இரவு விருந்தளித்து சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய திருமதி திரௌபதி முர்மு, இந்தியாவும் மங்கோலியாவும் புத்த பாரம்பரிய வழிபாட்டுத்தலங்களைக் கொண்ட ஆன்மிக அண்டை நாடுகளாக திகழ்வதை சுட்டிக்காட்டினார்.

முன்னதாக மங்கோலிய அதிபர் புதிய நாடாளுமன்ற வளாகத்தை பார்வையிட்டார்.

இந்த வளாகத்தில் உள்ள சிறப்பம்சங்களை மக்களவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா மங்கோலிய அதிபருக்கு எடுத்துக் கூறினார்.

<<<<>>>>

பிரதமரும் பி.ஜே.பி. மூத்த தலைவருமான திரு.நரேந்திர மோடி, பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரத்தை இன்று தொடங்குகிறார்.

“எனது வாக்குச்சாவடி வலிமையானது” என்ற இயக்கத்தின்கீழ், கட்சியின் வாக்குச்சாவடி அளவிலான தொண்டர்களுடன் கலந்துரையாட இருப்பதாக தமது சமூக வலைதளப் பதிவில் அவர் கூறியுள்ளார்.

பீகார் தேர்தலில், பி.ஜே.பி. மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றியை உறுதி செய்யும் விதமாக, கட்சித் தொண்டர்கள் அர்ப்பணிப்புடன் முழுவீச்சில் பணியாற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய தொண்டர்களுடன் கலந்துரையாடுவது, புதிய உத்வேகத்தை அளிக்கும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

243 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் சட்டப்பேரவைக்கு, அடுத்த மாதம் 6 மற்றும் 11-ந் தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ள நிலையில், பி.ஜே.பி. 71 வேட்பாளர்கள் அடங்கிய தனது முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை நேற்று வெளியிட்டுள்ளது.

<<<<>>>>

பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங், புதுதில்லியில் இன்று பிரேசில் துணை அதிபர் திரு.Geraldo Alckmin-ஐ சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

இதுகுறித்து, பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பிரேசில் பாதுகாப்பு அமைச்சர் திரு. Jose Mucio Monteiro Filho-வும் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் துறையில், இந்தியா - பிரேசில் இடையேயான இருதரப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது குறித்து, இந்த பேச்சுவார்த்தையின்போது, விவாதிக்கப்பட இருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், இரு நாடுகளுக்கும் பயனளிக்கக் கூடிய பல்வேறு அம்சங்கள் குறித்தும், ராணுவத் தளவாட தொழில் துறை ஒத்துழைப்பு குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளதாக, அந்த செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

உச்சநீதிமன்றம், மாநில உயர்நீதிமன்றங்கள் உட்பட நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் விசாரணைக்கு வர உள்ள அரசுத்துறை தொடர்பான வழக்குகள் பற்றிய தகவல் பலகையை மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் புதுதில்லியில் நேற்று தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், சட்ட தகவல் மேலாண்மை மற்றும் விளக்க நடைமுறை என்ற இந்த புதிய திட்டம் அரசுத் தரப்பில் வழக்குகளை

கையாள்வதில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் திறனை அதிகரிக்கச் செய்யும் என்று கூறினார்.

இதன்மூலம் நீதிமன்றங்களில் அடுத்த 7 நாட்களில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ள வழக்குகள் பற்றிய விவரங்களை இணையதளம் வாயிலாக அறிந்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் தெரிவித்தார்.

<<<<>>>>

நிலக்கரி மற்றும் கனிமங்கள் உற்பத்தியை அதிகரிக்கவும், துறையின் நீடித்த வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்துமாறு, இத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு.கிஷன் ரெட்டி, அதிகாரிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் தமது அமைச்சகத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், சுரங்கப் பணிகளை திறம்பட செயல்படுத்துமாறு அறிவுறுத்தினார்.

மேலும், தமது அமைச்சகத்திற்குட்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின், சமூக பொறுப்புணர்வுத் திட்டத்திலிருந்து வழங்கப்படும் நிதியை, மக்களுக்கு அதிகம்

பயனளிக்கும் திட்டங்களுக்காக பயன்படுத்துமாறும் திரு.கிஷன் ரெட்டி வலியுறுத்தினார்.

<<<<>>>>

இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி வீதம், ஏற்கனவே மதிப்பீடு செய்ததைவிட வேகமாக அதிகரித்து வருவதாக, சர்வதேச செலாவணி நிதியம் தெரிவித்துள்ளது.

உலகளாவிய பொருளாதார நிலை குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்கா அதிக வரி விதித்துள்ள போதிலும், நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி 6.6 சதவீதமாக இருக்கக் கூடுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மற்றும் நாட்டின் நிதிநிலைமையின் அடிப்படையில், இந்த கணிப்பு வெளியிடப்பட்டிருப்பதாக சர்வதேச செலாவனி நிதியம் குறிப்பிட்டுள்ளது.

எனினும், அடுத்த நிதியாண்டில் இது 20 அடிப்படை புள்ளிகள் குறைந்து, 6 புள்ளி 2 சதவீதமாக இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

யுக்ரைன் நாட்டின் முக்கியப் பகுதியை ரஷ்யா கைப்பற்றியிருப்பதாக, அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரஷ்யா-யுக்ரைன் இடையே கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் போரில் யுக்ரைனின் கிழக்குப் பகுதியில் உள்ள Donetsk பிராந்தியத்திற்கு உட்பட்ட Balahan முக்கிய தலமாக திகழ்ந்த நிலையில் தற்போது அந்தப் பகுதியை ரஷ்யப் படைகள் கைப்பற்றியுள்ளன.

பழங்காலத்தில் Dymytrov என்றழைக்கப்பட்ட யுக்ரைனின் Myrnohrad நகரை நோக்கி ரஷ்யப் படைகள் தொடர்ந்து முன்னேறி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தேசிய டிஜிட்டல் கால்நடை இயக்கம், கால்நடை இனப்பெருக்கம் மற்றும் நோய் கண்காணிப்புக்கு பேருதவியாக அமைந்துள்ளது என்று, மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்த இயக்கத்தின் பயிலரங்கு, இயக்கத்தின் செயல்பாட்டை விரைவுபடுத்தும் என்று கூறப்பட்டுள்ளது.

பாரத் பசுதான் இணையதளத்தில், இதுவரை 9 கோடியே 40 லட்சத்திற்கும் அதிகமான கால்நடை உரிமையாளர்களும், 34 கோடி கால்நடைகளும் பதிவு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை மேலாண்மை மற்றும் சேவை வழங்குவதை திறம்படமேற்கொள்ள ஏதுவாக, விவசாயிகளுக்கு உகந்த டிஜிட்டல் சூழலியலை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின்கீழ், உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த பெண் பயனாளிகளுக்கு தலா இரண்டு இலவச சமையல் எரிவாயு சிலிண்டர் வழங்கும் திட்டத்தை, அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் இன்று தொடங்கி வைக்கிறார்.

இந்த சிலிண்டர்கள், அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான கால கட்டத்தில் ஒன்றும், அடுத்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலத்தில் ஒன்று வீதமும் வழங்கப்பட உள்ளது.

இந்தத் திட்டத்திற்காக, ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், இதன்மூலம், உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஒரு கோடியே 86 லட்சம் மகளிர் பயனடைவார்கள் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்புக்கு பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

வேளாண் சாதனங்களுக்கான வரி குறைக்கப்பட்டிருப்பதன் மூலம் டிராக்டர் உள்ளிட்ட சாதனங்களின் விற்பனை அதிகரித்துள்ளதாக தமிழகத்தின் வேலூரை சேர்ந்த விற்பனையாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - வியாபாரி - 25 Sec)

இதேபோன்று விவசாயப் பணிகளுக்கு போதுமான தொழிலாளர்கள் கிடைக்காத நிலையில், வரிகுறைப்பு காரணமாக வேளாண் சாதனங்களை குறைந்த விலையில் வாங்கிப் பயன்படுத்துவது மிகவும் பயனுள்ளதாக விவசாயி ஒருவர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Farmer - 32 Sec)

<<<<>>>>

சுல்தான் ஜோஹர் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா-பாகிஸ்தான் இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா 3 கோல் அடித்தன.

----------------

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின்போது மழை குறுக்கிட்டதால் இரண்டாவது இன்னிங்சில் ஒருபந்துகூட வீசாமல் ஆட்டம் கைவிடப்பட்டது.

இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

கொழும்பில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களமிறங்கிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 258 ரன் எடுத்திருந்தது.

<<<<The End>>>>